ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 1.5 – வளவேழ்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.5 – வளவேழ்

‡ வள ஏழ் உலகின் முதலாய ⋆
வானோர் இறையை அரு வினையேன் ⋆
களவேழ் வெண்ணெய் தொடு உண்ட ⋆
கள்வா ! என்பன் பின்னையும் ⋆
தளவேழ் முறுவல் பின்னைக்காய் ⋆
வல்லான் ஆயர் தலைவனாய் ⋆
இள ஏறேழும் தழுவிய ⋆
எந்தாய் ! என்பன் நினைந்துநைந்தே ॥ **1.5.1** ॥

நினைந்து நைந்துள் கரைந்துருகி ⋆
இமையோர் பலரும் முனிவரும் ⋆
புனைந்த கண்ணி நீர் சாந்தம் ⋆
புகையோடேந்தி வணங்கினால் ⋆
நினைந்த எல்லாப் பொருள்கட்கும் ⋆
வித்தாய் முதலில் சிதையாமே ⋆
மனம் செய் ஞானத்துன் பெருமை ⋆
மாசூணாதோ மாயோனே ॥ **1.5.2** ॥

மா யோனிகளாய் நடை கற்ற ⋆
வானோர் பலரும் முனிவரும் ⋆
நீ யோனிகளைப் படை என்று ⋆
நிறை நான் முகனைப் படைத்தவன் ⋆
சேயோன் எல்லா அறிவுக்கும் ⋆

திசைகள் எல்லாம் திருவடியால் தாயோன் ⋆
எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன் ⋆
தானோர் உருவனே ‖ **1.5.3** ‖

தானோர் உருவே தனி வித்தாய்த் ⋆
தன்னில் மூவர் முதலாய ⋆
வானோர் பலரும் முனிவரும் ⋆
மற்றும் மற்றும் முற்றுமாய் ⋆
தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி ⋆
அதனுள் கண்வளரும் ⋆
வானோர் பெருமான் மா மாயன் ⋆
வைகுந்தன் எம் பெருமானே ‖ **1.5.4** ‖

மானேய் நோக்கி மடவாளை ⋆
மார்வில் கொண்டாய் ! மாதவா ! ⋆
கூனே சிதைய உண்டை வில் ⋆
நிறத்தில் தெறித்தாய் ! கோவிந்தா ! ⋆
வானார் சோதி மணிவண்ணா ! ⋆
மதுசூதா ! நீ அருளாய் ⋆
உன் தேனே மலரும் திருப்பாதம் ⋆
சேரும் ஆறு வினையேனே ‖ **1.5.5** ‖

வினையேன் வினை தீர் மருந்தானாய் ! ⋆
விண்ணோர் தலைவா ! கேசவா ! ⋆
மனை சேர் ஆயர் குல முதலே ! ⋆
மா மாயனே ! மாதவா ! ⋆
சினை ஏய் தழைய மராமரங்கள் ⋆
ஏழும் எய்தாய் ! சிரீதரா ! ⋆

இனையாய் ! இனைய பெயரினாய் ! ⋆
என்று நைவன் அடியேனே ‖ **1.5.6** ‖

அடியேன் சிறிய ஞானத்தன் ⋆
அறிதல் ஆர்க்கும் அரியானை ⋆
கடி சேர் தண்ணம் துழாய்க் ⋆
கண்ணி புனைந்தான் தன்னைக் கண்ணனை ⋆
செடி ஆர் ஆக்கை அடியாரைச் ⋆
சேர்தல் தீர்க்கும் திருமாலை ⋆
அடியேன் காண்பான் அலற்றுவன் ⋆
இதனில் மிக்கோர் அயர்வுண்டே ‖ **1.5.7** ‖

உண்டாய் உலகேழ் முன்னமே ⋆
உமிழ்ந்து மாயையால் புக்கு ⋆
உண்டாய் வெண்ணெய் சிறு மனிசர் ⋆
உவலை ஆக்கை நிலை எய்தி ⋆
மண் தான் சோர்ந்ததுண்டேலும் ⋆
மனிசர்க்காகும் பீர் ⋆
சிறிதும் அண்டா வண்ணம் மண் கரைய ⋆
நெய் ஊண் மருந்தோ மாயோனே ‖ **1.5.8** ‖

மாயோம் தீய அலவலைப் ⋆
பெரு மா வஞ்சப் பேய் வீய ⋆
தூய குழவியாய் விடப் பால் அமுதா ⋆
அமுது செய்திட்ட மாயன் ⋆
வானோர் தனித் தலைவன் மலராள் மைந்தன் ⋆
எவ்வுயிர்க்கும் தாயோன் ⋆

தம்மான் என் அம்மான் ⋆
அம்மா மூர்த்தியைச் சார்ந்தே ॥ **1.5.9** ॥

சார்ந்த இரு வல் வினைகளும் சரித்து ⋆
மாயப் பற்றறுத்து ⋆
தீர்ந்து தன் பால் மனம் வைக்கத் திருத்தி ⋆
வீடு திருத்துவான் ⋆
ஆர்ந்த ஞானச் சுடர் ஆகி ⋆
அகலம் கீழ் மேல் அளவிறந்து ⋆
நேர்ந்த உரு ஆய் அரு ஆகும் ⋆
இவற்றின் உயிராம் நெடுமாலே ॥ **1.5.10** ॥

‡ மாலே ! மாயப் பெருமானே ! ⋆
மா மாயனே ! என்றென்று ⋆
மாலே ஏறி மால் அருளால் ⋆
மன்னு குருகூர்ச் சடகோபன் ⋆
பால் ஏய் தமிழர் இசை காரர் ⋆
பத்தர் பரவும் ஆயிரத்தின் பாலே பட்ட ⋆
இவை பத்தும் வல்லார்க்கு ⋆
இல்லை பரிவதே ॥ **1.5.11** ॥

அடிவரவு — வளவேழ் நினைந்து மாயோனி தானோர் மானேய் வினையேன் அடியேன் உண்டாய் மாயோம் சார்ந்த மாலே பரிவதில்

வளவேழ் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்